**S.C.No.119/2025**
**PW3 : வெற்றிவேல்**
**தேதி : 06.03.2026**
**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**Crl.M.P.No.116/2026 என்ற மனுவில் 05.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல்துறையினர் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நீங்கள் பேருந்தில் பயணம் செய்ததற்கான பேருந்து பயணச்சீட்டை காவல்துறையினர் பெறவில்லை. நான் திருச்சியிலிருந்து பேருந்தில் பயணிக்கும்போது பேருந்தின் நடுப்புறத்தில் உட்கார்ந்திருந்தேன். நான் சத்தம் கேட்டு பின்னர் தான் பேருந்தின் முன்னால் சென்று பார்த்தேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நீங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் நீங்கள் ஓட்டுநர் என்பதால் அரசு பேருந்து ஓட்டுநருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.06 20:09:41 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.